ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2222/2 - 2021 අප්‍රේල් මස 05 වැනි සඳුදා - 2021.04.05

*2222/2 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*

*3இ பிரிவின் கீழான கட்டளை*

*1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3இ பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 3இ பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 1992/ 30 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் அட்டவணையின் 8 ஆம் பந்தியுடன் உடனடுத்து வருமாறு பின்வரும் புதிய பந்தியை உட்சேர்ப்பதன் ஊடாக திருத்தியமைப்பதாகப் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*“(9) திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்திற்குட்பட்டு, இலங்கை பொலிஸ் விடயத்திற்குப் பொறுப்பான நிரல் அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில், இலங்கை பொலிஸிற்கு 2,000 முச்சக்கர வண்டிகளின் கொள்வனவிற்கான 2021 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதிய 21/0515/332/005-II/TBR ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பான 2021 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் தீர்மானத்திற்கிணங்க, இறக்குமதி செய்யப்பட்ட முச்சக்கர வண்டி ஒன்று.”*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2021, ஏப்பிறல் 05.*

*04-619*

1A - PG 5375 — 475 (2021/04) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.